# வேலையில் காயம்/வலி அல்லது நோய் ஏற்பட்டால் என்ன செய்வது

1

2

3

4

## வேலையில் நீங்கள் காயமடைந்தால் அல்லது நோய்வாய்ப்பட்டால்

உங்களின் காயம்/வலி அல்லது நோய் பற்றி WSIB க்கு அறிவிப்பதன் மூலம் ஆதாயங்களைக் கோருவதற்கு, உங்களின் காயம்/வலி ஏற்பட்ட அல்லது நோயறியப்பட்ட நாளிலிருந்து ஆறு மாத காலம் உங்களுக்கு உள்ளது.

பின்வருவன நிகழ்ந்தாலும்கூட, உங்களின் வேலையிடத்தில் ஏற்பட்ட காயம்/வலி அல்லது நலமின்மை பற்றி நீங்கள் அறிவிக்க வேண்டும்:

- உங்களின் மேற்பார்வையாளர் அல்லது மேலாளர் அதனை அறிவிக்க வேண்டாம் என்று, அல்லது அதனை நீங்கள் அறிவித்தால் உங்களின் வேலையை நீங்கள் இழப்பீர்கள் என்று உங்களுக்குக் கூறுகிறார்
- உங்களின் காயம்/வலி அல்லது நோய் WSIB ஆல் காப்பீடு செய்யப்படாதென உங்களின் வேலைவழங்குநர் கூறுகிறார்
- வேலையிடத்தில் ஏற்பட்ட காயம்/வலி அல்லது நோய் பற்றி அறிவிப்பதற்குப் பதிலாக, நோய்வாய்ப்படும் நாட்களுக்கென ஒதுக்கப்பட்டிருக்கும் லீவுநாட்களை அதிலிருந்து மீள்வதற்குப் பயன்படுத்துமாறு உங்களின் வேலைவழங்குநர் கூறுகிறார்

## வணிகம்

உங்களின் பணியாளரின் வேலையிட காயம்/வலி அல்லது நோய் பற்றி அறிந்த மூன்று நாட்களுக்குள் வேலையிட காயம்/வலி அல்லது நோய் குறித்து நீங்கள் அறிவிக்க வேண்டும்.

குடும்ப, பருவகால அல்லது தற்காலிகப் பணியாளர்கள், சில உள்ளூர்ப் பணியாளர்கள், கட்டுமானப் பணிகளைச் செய்பவர்கள், மாணவர்கள், பயிற்சி பெறுபவர்கள் மற்றும் பயிற்சியில் பங்குகொள்பவர்கள் உள்ளடங்கலாக உங்களுடைய வணிகத்தில் நீங்கள் வேலைக்கமர்த்தும் அனைவரினதும் காயம்/வலி அல்லது நோய் பற்றி அறிவிப்பதற்கு நீங்களே பொறுப்பானவர்.

காயம்/வலி அல்லது நோய் வேலையுடன் தொடர்பானதா என்பது உங்களுக்குத் தெரியாவிட்டாலும், அதை நீங்கள் எங்களுக்குத் தெரிவிக்க வேண்டும். காயம்/வலி அல்லது நோய் ஒன்று வேலையுடன் தொடர்பானதா அல்லது தொடர்பற்றதா என்பதை நாங்கள் முடிவு செய்கிறோம்.

வேலையிடத்தில் ஏற்பட்ட காயம்/வலி அல்லது நோய் ஒன்றைப் பற்றி அறிவிக்காமலிருப்பதை ஊக்கப்படுத்துவது சட்டத்திற்கு விரோதரானது.

# வேலையில் காயம்/வலி அல்லது நோய் ஒன்று ஏற்பட்டால் இந்த வழிமுறைகளைப் பின்பற்றுங்கள்:

| படிமுறை | வேலையில் நீங்கள் காயமடைந்திருந்தால் அல்லது நோய்வாய்ப்பட்டிருந்தால் | வணிகங்கள் |
|---|---|---|
| **1. மருத்துவ உதவி பெறுங்கள்** | உடனே முதலுதவியைப் பெற்றுக்கொள்ளுங்கள்.<br>மேலதிக சிகிச்சை உங்களுக்குத் தேவைப்பட்டால் ஒரு மருத்துவரிடம் அல்லது மருத்துவமனை ஒன்றுக்குச் செல்லுங்கள். | **முதலுதவியை வழங்குங்கள்.**<br>மேலதிக சிகிச்சை தேவைப்பட்டால், நீங்கள் உங்களின் பணியாளரை இடம்மாற்ற வேண்டும் அல்லது காயமடைந்த நாளில் உங்களின் பணியாளரை மருத்துவமனைக்கு அல்லது மருத்துவரிடம் கொண்டுசெல்வதற்கான போக்குவரத்துச் செலவை நீங்கள் வழங்கவேண்டும். |
| **2. ஆவணப் படுத்தல்** | உங்களின் காயம்/வலி அல்லது நோய் மற்றும் உடனடியாக உங்களுக்குக் கிடைத்த மருத்துவ சிகிச்சைகள் பற்றி **உங்களுடைய வேலைவழங்குநருக்குக் கூறுங்கள்.** | என்ன நடந்தது என்பதை நீங்கள் **விசாரிக்க** வேண்டும் அத்துடன் நடந்தது பற்றியும், பிரச்சினையைச் சரிசெய்வதற்கு நீங்கள் எடுக்கும் நடவடிக்கைகள் பற்றியும் **விரிவான பதிவு** ஒன்றை நீங்கள் வைத்திருக்க வேண்டும். |
| **3. WSIB க்கு அறிவித்தல்** | பின்வருவன நிகழ்ந்தால், உங்களின் காயம்/வலி அல்லது நோய் பற்றி **அறிவியுங்கள்:**<br>• ஒரு மருத்துவர் அல்லது மருத்துவமனையிலிருந்து உங்களுக்குச் சிகிச்சை தேவைப்படுகிறது (முதலுதவிக்கு அப்பால்), அல்லது<br>• உங்களால் வேலைக்குச் செல்ல முடியாமலுள்ளது, அல்லது<br>• உங்களுக்குக் குறைந்த ஊதியம் வழங்கப்படுகிறது அல்லது குறைந்தளவு நேர வேலை கிடைக்கின்றது.<br>பணியாளர் ஒருவரின் காயம்/வலி/நோய் பற்றிய அறிக்கை (படிவம் 6) ஒன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் அதை நீங்கள் WSIBக்கு அறிவிக்கலாம். | பின்வருவன உங்களின் பணியாளருக்குப் பொருத்தமாக இருந்தால், வேலையிடத்தில் ஏற்பட்ட காயம்/வலி அல்லது நோய் ஒன்றைப் பற்றி அறிந்துகொண்ட **மூன்று நாட்களுக்குள்** காயம்/வலி/நோய் பற்றிய வேலைவழங்குநரின் அறிக்கையைச் (படிவம் 7) **சமர்ப்பியுங்கள்:**<br>• முதலுதவிக்கு அப்பாலும் சிகிச்சை தேவைப்படுகிறது, அல்லது:<br>• வேலைக்கு வராமல் இருக்கிறார், அல்லது<br>• வழமையான ஊதியத்தை விடக் குறைவான ஊதியத்தைச் சம்பாதிக்கிறார், அல்லது<br>• தொடர்ந்துவரும் ஏழு நாட்களுக்கு வழமையான ஊதியத்துடன் மாற்றியமைக்கப்பட்ட வேலை தேவைப்படுகிறது.<br>உங்களின் பணியாளருக்கு, நீங்கள் காயம்/வலி அல்லது நோய் பற்றிய அறிக்கையின் **நகல் ஒன்றை வழங்க** வேண்டும்.<br>சம்பவம் நடந்த அன்று, **உங்களின் பணியாளருக்கு** நீங்கள் முழு நாள் ஊதியம் **கொடுக்க** வேண்டும். அங்கீகரிக்கப்பட்டால், காயம்/வலி அல்லது நோய் ஏற்பட்ட நாளுக்கு அடுத்த வேலை நாள் முதல் WSIB ஆதாயங்கள் கிடைக்கத் தொடங்கும். |

முதலுதவி மட்டுமே சிகிச்சையாகப் பெறப்பட்டிருந்தால், அதை WSIBக்கு நீங்கள் தெரிவிக்கத் தேவையில்லை.

**நிச்சயமாகத் தெரியவில்லையா? எங்களைத் தொடர்புகொள்ளுங்கள்**

| | | |
|---|---|---|
| **4. ஒன்றிணைந்து வேலை செய்யுங்கள்** | **தொடர்பில் இருங்கள்.** நீங்கள் மீட்சியடைந்து, பாதுகாப்பாகத் தகுந்த நேரத்தில் வேலைக்குத் திரும்புவதற்கு உதவிசெய்வதற்காக உங்களுடனும் உங்களின் வேலைவழங்குநருடனும் இணைந்து நாங்கள் செயல்படுவோம். | **தொடர்பில் இருங்கள்.** உங்களுடைய பணியாளர் மீட்சியடைந்து, பாதுகாப்பாகத் தகுந்த நேரத்தில் வேலைக்குத் திரும்புவதற்கு உதவிசெய்வதற்காக உங்களுடனும் அவருடனும் இணைந்து நாங்கள் செயல்படுவோம் |

## மோசடிசெய்தல் மற்றும் அமைப்பைத் துஷ்பிரயோகம் செய்தல் பற்றி அறிவித்தல்

WSIB கோரிக்கை ஒன்றை நிறுத்த முயற்சித்தல் உள்ளடங்கலாக, எவராவது குற்றம் ஒன்றைச் செய்திருப்பதாக அல்லது பணியிடப் பாதுகாப்பு மற்றும் காப்பீட்டு அமைப்பைத் தவறாகப் பயன்படுத்துவதாக நீங்கள் சந்தேகித்தால், 1-888-745-3237 என்ற தொலைபேசி இலக்கத்தின் மூலமாகவோ அல்லது wsib.ca/reportfraud என்ற எங்களின் வலைத்தளம் மூலமாகவோ தயவுசெய்து அதை ரகசியமாக அறிவியுங்கள்.

## எங்களைப் பற்றி

நாங்கள் உதவுவதற்காகவே இருக்கிறோம். வேலையில் காயம்/வலி அல்லது நோய் ஒன்று ஏற்படும்போது, ஊதிய இழப்பு ஆதாயங்கள், மருத்துவக் காப்பீடு மற்றும் வேலைக்குத் திரும்பிச்செல்வதற்கு உதவுவதற்கான ஆதரவை நாங்கள் வழங்குகிறோம். ஒன்ராறியோ முழுவதும் உள்ள 300,000க்கும் மேற்பட்ட வேலையிடங்களில் வேலைசெய்யும் ஐந்து மில்லியனுக்கும் அதிகமான மக்களை உள்ளடக்கி இருக்கும் நாங்கள், வட அமெரிக்காவின் மிகப்பெரிய காப்பீட்டு நிறுவனங்களில் ஒன்றாக இருக்கிறோம்.

**wsib.ca/reporting**

**தொலைபேசி:** 416-344-1000

**கட்டணமற்ற தொலைபேசி:** 1-800-387-0750

**செவிப்புலனற்றோருக்கானது:** 1-800-387-0050

**தலைமை அலுவலகம்:** 200 Front Street West, Toronto, ON  M5V 3J1